# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**24227**/விசாரணை/2009

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு R.சுப்பிரமணியன்,<br>M1-249, கூடல்புதூர்,<br>மதுரை – **625 017.** |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>நீர் ஆதார அமைப்பு,<br>பொதுப் பணித்துறை,<br>மதுரை மண்டலம்,<br>மதுரை – **625 002.** |

*****

மனுதாரர் திரு R.சுப்பிரமணியன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு வெ.கிருஷ்ணசாமி, சிறப்பு நிலை வரைதொழில் அலுவலர், பொதுப்பணித்துறை, நீர் ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளர் அலுவலகம், மதுரை மண்டலம், மதுரை இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 12.02.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)—ன் கீழ் மதுரை வடக்கு செல்லூர் மற்றும் சாத்தையார் ஓடையிலிருந்து வண்டியூர் வரையிலான பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு முன்னர் ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் எல்லைக் கற்கள் நடுதல் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தகவல்களாகப் பொதுத் தகவல் அலுவலர், தலைமைப் பொறியாளர், நீஆஅ, மதுரை மண்டலம் அவர்களிடம் கேட்டிருக்கின்றார். தகவல் பெறாததால் 02.03.2009 அன்று மனுதாரர் சட்டப் பிரிவு 19(1)—ன்கீழ் துறைக்கு மேல் முறையீடு செய்துள்ளார். 14.07.2009 அன்று மனுதாரருக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. பெற்ற தகவல் முழுமையாக இல்லாததால் 24.09.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)—ன் கீழ் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது குறித்தும், எல்லைக் கற்கள் நடப்பட்டு மேற்கண்ட கண்மாய்களின் நீர் வரத்து மற்றும் உபரி நீர் வாய்க்கால்கள் குறித்த தகவல்களும் பெறப்பட்டுள்ளன என்று மனுதாரர் கூறினார். மனுதாரர் குறித்துள்ள திட்டங்கள் யாவும் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்ட பின்பு தான் செயல்படுத்த முடியும் எனவும், சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படா வண்ணம் மனுதாரர் கோரிய ஆக்கிரமிப்புகள் யாவும் அகற்றப்படும் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு ஏற்றவாறு நடத்தப்பட்டு வருவதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை திட்டத்தின் கீழ் செல்லூர் கண்மாய் மற்றும் சாத்தையாறு ஓடையிலிருந்து வண்டியூர் வரையிலான பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருப்பதை விவரமாகப் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அளித்துள்ளார். 4.7632 ஏக்கர் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டியிருக்கிறது எனவும், ஜூலை 2010 அளவில் இப்பணிகள் முடிவடையும்போது ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் எல்லைக் கற்கள் நடுதல் ஆகிய பணிகளும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விடுமெனவும் பொதுத் தகவல் அலுவலர் 25.01.2010 அன்று மனுதாரருக்குத் தெரிவித்துள்ளார். எனவே உரிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. இப்பணி உரிய காலத்தில் முடிவடையாவிட்டால் இது

குறித்து உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுப் பரிகாரம் தேடிக்கொள்ளலாமென்று மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**வழக்கு எண்.24227/விசாரணை/2009**

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம்,
நீர் ஆதார அமைப்பு,
பொதுப் பணித்துறை,
மதுரை மண்டலம்,
மதுரை – 625 002.

திரு R.சுப்பிரமணியன்,
M1-249, கூடல்புதூர்,
மதுரை – 625 017.

*"ptl"*